1. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) ஓர் உறுப்பினரது தெலுங்கு உரைக்கு மொழிபெயர்ப்பு வழங்கக் கோரியது

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுந்தரத் தெலுங்கில் உரையாற்றினார். அது அவருடைய உரிமை. நன்றாக, அருமையாகப் பேசினார். நீங்கள்கூட மணியடித்து ஏதோ சொன்னீர்கள். ஆனால் எங்களுக்குப் புரியவில்லை. எனவே, இதுமாதிரி பேசும்போது மொழிபெயர்ப்புக்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 5 ஆண்டு காலம் துணை சபாநாயகராக இருந்திருக்கிறீர்கள். நம்முடைய சட்டமன்ற விதிகளைப் பாருங்கள். சட்டமன்ற விதிகளிலே, ஒருவர் தெரிந்த மொழியிலே பேசலாம் என்றிருக்கிறது. அதனால் ஒன்றும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் செல்வி க. பாலபாரதி. (குறுக்கீடு) ஸ்கிரிப்ட்டை கொடுத்து விட்டுத்தான் பேசுகிறார்.

4. மானியக் கோரிக்கைகள், 2002-2003 விவாதமும் வாக்கெடுப்பும்-*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 33-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை.

கோரிக்கை எண். 40- ஊரக வளர்ச்சித் துறை—*தொடர்ச்சி*

செல்வி க. பாலபாரதி; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துகளை இந்த மன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். சென்னையில் கடந்த காலங்களில் கடுமையான குடிதண்ணீர்ப் பிரச்சினை என்பது நிலவியது. இங்கே இருக்கக்கூடிய மக்கள் கடிதம் எழுதுகிறபோது, நலம், நலமா என்று எழுதுவதற்குப் பதிலாக, ஜலம், ஜலமா என்று எழுதக்கூடிய அளவிற்கு பத்திரிகைகள், எல்லாம் துணுக்குகள் எழுதிக் கொண்டிருந்த நிலையை மாற்றி, இன்றைக்குக் குடிநீருக்கான சில அறிவிப்புகளை இந்த அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.